225045

71

ஞானாங்க மாலை

ACL-TNAL
00087

Q23:A17
N21

225045

32

4- JUL 19

உ

சிவமயம்.

ஞானானந்த மாலை.

முக்கிய முகவுரையுடன் கூடியது.

ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமிகள்

(*)

பிரசாதகர்
மதுரை, பிட்டுத்தோப்பு யாதவகுருமடம்
பிர்மஸ்ரீ சடைச் சுவாமிகள்
அவர்கள்.

மதுரை வடக்குமாசிவீதி
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது
1921.

225049

உ

முக்கிய முகவுரை.

அன்பே அருள்வடிவாகி அமைந்திருக்கும் கனவான்களே!

யதார்த்த தர்மசிந்தனை யுடையவன் ஞானியாம். தைரியம், க்ஷமை, புத்தி, வித்தை முதலிய பத்து குணங்களுடன் செய்யப்படாநின்ற ஒருகர்மமே தர்மம். சத்கர்ம துஷ்கர்மங்க ளென்றிருப்பதால் மேல் சொன்னதர்மம் அததற்கு அத்தன்மையைக்காட்டி தர்மமாகத்தான் துலங்கும். அவ்விரண்டிலும் அந்த பத்து குணங்களும் அளவிடும்படி அமைந்திருக்கும் ஆதலால், எறும்புமுதல் (எண்ணத்தகுமாகில்) எண்ணுயிர சீவபேதங்களிலும் இந்த தர்மம் இருக்கத்தான்செய்யும். ஆனல், நமக்கு மனிததர்மத்தை சிந்திப்போம். சிருஷ்டியுடைய தனிக்குணம் தனிக்குணமேயாம். கண்மூக்குமுதலான இந்திரியங்களுக்கு; பார்க்கிறது கேட்கிறது என்ற தர்மம். இது எல்லாசீவிகட்கும் இருக்கவேண்டும். ஆகார நித்திராமைதுனங்களும் அப்படியே, வாக்குமனக் காயங்களும் அப்படியே. ஆகையால் நமக்கென்ன விசேஷம் இப்படியே ஆராய்ந்து பார்க்கும்போது சூக்ம அவஸ்தையாலும், டஞானத்தாலும் சிருஷ்டியிலே இயற்கைப்பட்ட ருகுணம் நமக்குண்டு. இந்த மனிதப்பிறவியாலன்றி தைத் தெரிந்துக்கொள்ள முடியாது.

அதீத (கடந்த-தாண்டின) சத்தத்திற்கு அதிபியான ஈஸ்வரனுக்கேயன்றி ஆனந்தப்பிராப்தியில் ஏனென்றால், கடந்தநிலே குணத்திற்கும் தாத்தி

ற்கும் எல்லாத்திற்கும் வேண்டும். (குணாதீதன், சர்வாதீதன் என்றுகாண்க) கணக்கிலே சாஸ்தியானநிலை கடந்தநிலே. லக்ஷமே ஒருகணக்காக்குவோம். லக்ஷம் ரூபாய் சம்பாதிக்கப்பிறந்தவன் எவ்விதமும் அவ்வளவும் சம்பாதித்தபிறகு ஒருவன் ஐயா உங்களுடைய வேலையெல்லாம் ஆய்விட்டதா? என்று கேட்குமாத்திரத்தில், அய்யா! அப்பா! ஓ,ம்-அதெல்லாம் சாத்தியமாயவிட்டது, என்பான். அப்போ, லக்ஷம் சம்பாதிக்கும் விஷயம் அவனுக்கு சித்தியாய் விட்டதென்று கருத்து. அதுமுதல் தல்சம்பந்தமான ஈஸ்வரத்வமும், ஆனந்தப்ராப்தியும் உண்டாகும். அதைப்போலவே, மனிததர்மம் என்ற விஷயத்தைமுன்னிட்டு சர்வைஸ்வரியத்தையும், சர்வானந்தத்தையும் வேண்டுதலே நமதுகடமை. சிருஷ்டிமுதல்சிந்திப்போம். பிறந்த ஒருகுழந்தையுடைய பிரகிருதிக்கு பேதமென்ன?

கண்-காது-காழ்சி-கேள்வி எல்லாம் எல்லாமே. வெளுப்பு, கறுப்பு, கெரிப்பு நீரென்றெல்லாம் தெரிசன ஸ்பரிசனபோதமிருக்கும். வெண்மையைப்பார்த்தால் அப்படியே பார்த்திருப்பான். நெருப்பானல் அதைத்தான் பார்ப்பான். கைகளால் தொடுவான் தேய்ப்பான் (உரசுவான்) துடைப்பான். அடிப்பா(ல்) எப்படியும் வேதனைப்பட்டால் அழுவான். இப்படி பின்னமாயம், அபின்னமாயும், பேதமாயும், பேதமாயும் அமைந்திருக்கிற அறிவை முதல் பகு(த்)தால் ரூபீகரிப்போம். வாயும், மூக்குமில்லாவிடி சத்தத்திற்கு விளக்கமில்லை. ஒருகுழந்தை பிறந்(த)டன், வாய்நீர் உள்ளிறங்கி அங்கு-இங்கு என்று ளிப்படுகிறது. மறுபடி வாய்திறந்த சத்தம், அ-

றும், மூடினசத்தம், ம்-என்றும், அ-ம் அ-ம் அப்-ஆ அம்-ஆ, அம்மா, அம்மா என்று கத்துகிறது. அப்பொழுது, தாயார்வந்து தன்ரூபத்தைக்காட்டி; இங்கு-இங்கு, பிள்ளைக்கு இங்குவேணுமா?—அம்மை,—அம்மை, நான்தான் அம்மை என்று சத்தரூபபேதங்களை திடப்படுத்துகிறார். இப்படி கல்லு, மண்ணு, தண்ணீர், பால், பழம், சக்கரை, நான் நீயென்று பழகுறார்கள். இந்தப்பழக்கம் பொதுவானது. இப்போ, முன்னில்லாமல பின்னில்லையென்று நிச்சயம். இனி முன்னறிவைப்பார்ப்போம். எல்லோரும் சித்தர்கள் முத்தர்கள், சிரஞ்சீவிகள், பரமானந்தத்தை ப்ராபித்தவர்கள். ஏனென்றால், உலகம் அன்னாசை, பெண்ணாசை, பொன்னாசையென்று உருண்டுமூன்றுக்கொண்டிருக்கின்றன. இவைகளினின்று சடைத்தேறி கதிபெறும்பொருட்டேது? அன்னாசையை அகற்ற வேண்டும். அதற்கு சிலர் பால், பழம், சருகு, கிழங்குகள் சாப்பிட்டு மிகவும் சிறு ஆகாரத்திலிருக்கிறார்கள். சிலர் ஒரே ஆகாரமல்லாமல் பலாகாரத்திலிருக்கிறார். மற்று சிலர் மணிமந்திர அவுஷதங்களால் அனேகவித மிருக்கிறார்கள். பெண்ணாசையை சிலர் "மனதாலே செய்கிறதே செய்கை, மகளையும் முத்தமிடுவார்கள், மனைவியையும் முத்தமிடுவார்கள், சரீர சம்பந்தமான மற்று செய்கைகட்கு என்னபேதம்? இதற்கெல்லாம் மனந்தானே காரணம், அம்மனமோ வேறில்லை ஆகையால், பெண்பிறவியே தாய்பிறவி" என்று சுத்தமே விட்டொழிந்திருக்கிறார்கள். சிலர் சரீரத்தை ஒடுக்கி அதற்கிடைகொடாமலிருக்கிறார். மற்றுசிலர் மனதையும் சரீரத்தையும் ஒடுக்கி யொழி

ந்திருக்கிறார்கள். சிலர் இவ்விஷயத்திலும் மணிமந்திர அவுஷதங்களை பிரயோகித்து ஒடுக்கியிருக்கிறார்கள். பொன்னாசைக்கு சிலர் "ஆளுக்கு செத்தச்செத்த அடியனுக்கு தலைச்சுமை" என்று பிச்சையெடுத்து சம்பாதிக்கிறார். அதற்காக மற்றுசிலர் விவசாயவாணிபங்கள் செய்கிறார். சிலர், கூலிவேலை செய்கிறார் மற்றுசிலர், "பணமும், புல்லும் சரியே புல்பூடுகள் பிடுங்கி விற்றாலும் துட்டுசம்பாதிக்கலாம். அதுகள், 'வித்யாதனம்ஸர்வதனால்ப்ரதானம்'என்றிருக்கஅவுஷதங்களாகவுதவும்அதனால்,செம்புமுதலியலோகங்களை சவற்ணம்செய்யமுடியுமென்றுசம்பாதிக்கிறார்கள். மற்றபடிசிலர், மணிமந்திராதிகளாலும்பணத்தாசையை ஒழித்திருக்கிறார்கள். இப்படிமூவாசைக்குமுடிவாகண்டு முயற்சியடைய வேண்டியசித்தம் மூன்றவஸ்தைகளையும் தேடுகிறது. இங்கே உபதேசவுண்மை வெளிப்படும். (மூச்சொடுங்கினாலும் சிலற்கு மனமொடுங்காதென்றும், மனமொடுங்கினால் எல்லோர்க்கும் மூச்சொடுங்குமென்றும் சட்டம்.) புருஷார்த்தம் பெறவேண்டியதுதான் மனித தர்மம். அது, பேரின்பவனுபோகங்களால் ப்ரத்யக்ஷப்படும். பிரகிருதி, சாக்கிரசொப்பனசுஷப்தி அவஸ்தைகட்கு அதீனமாகையால், அந்த பிரகிருதிபோதத்திற்குமுன் சாக்ஷால்காரம்தெரியும். பிறவிக்கு காரணமென்ன? எதற்காகப் பிறந்தது? இதற்கு ஒடுக்கமென்ன எப்படி? அவரைபார்த்தால் அப்படி, இவரைப்பார்த்தாலிப்படி என்று இலக்ஷணமும் தல்குணமும்பேதப்பட்டிருக்கிறது. சாக்ஷால்காரமும் பெறவேண்டும். எவ்வாறென்று, சற்வசங்கபரித்யாகியான குருநாதனிடம் ஞானோபதேசம்பெற

வெளிப்பட்டோம். அவரோ, தன்னைவிட்டுப் பிரியாதபடிதானே ஒவ்வொரு சித்திகள் காட்டிவந்தார். ஒருநாள் உபதேசம் கேள்க, இரிம்புகோல் பழுக்கக்காய்ச்சி துடைமேல் வைக்கவந்தார். ஒருநாள், வெங்கலம் உருக்கிக் குடிக்கவேண்டுமென்றார். மற்றொருநாள், அட்டை, பூச்சி, பாம்பு, பல்லி, தேள், சிலந்தி இவைகளை திங்கச்சொன்னார் மலவிசர்ச்சனம் செய்து அதை திங்கச்சொன்னார்-பால்பழம்தான் சாப்பிடவேண்டுமென்றார்-பெண்ணாசையை எவ்விதமும் விடவேண்டுமென்றார்-பணத்தாசையை ஒழிக்கவேண்டுமென்றார் — மணிபோலவந்தார், மலைபோல நின்றார். பூனையாயிருந்தார் - புலியாகவந்தார் - கூடுவிட்டுக்கூடுபாய்ந்தார்-ஆகாயத்தில் மறைந்தார்-மறுபடி, அங்கேவந்தார்-இங்கேவந்தார். இப்படிப்பட்டவரிடம் உபதேசம் பெறுவதெப்படி? ஆனால், ஏதேனும் சில நிபந்தனைகட்கு கட்டுப்பட்டு சற்குருநாதரிடம்கூடி அநேககாலம் சஞ்சரித்தோம் "நினைவொடு மொழிதல் செய்தல்" மூன்றும், நீணாளப்பழக்கத்தால் ஒரு நிலையிலாயிற்று. அப்படியிருக்க ஒருநாள், நீங்கள் சந்தேகப்படவேண்டாம்—எல்லாம் அதற்கதாக அமைந்திருக்கிறது - ஆகிருதிப்பிரகிருதிகள் அதற்குசாக்ஷிகளாம்-அவன் அதறகாகப்பிறந்தவன்-இவனிதற்குப்பிறந்தவன் அல்லாவிடில், எல்லோரும் ஓரே ஆகிருதியினும பிரகிருதியுனு மிருக்கவேண்டுமல்லவா அதில்லையே-ஆகையால், முன்முன் குருநீதிகளைப்பார்க்கும்போது நாமரூபங்கள் பலவாறாய்க்காணப்படும்—அனுபவித்திருக்கின்ற சாக்ஷால்காரபதம் ஒன்றே—அகஸ்தியர், திருமூலர், போகர், சுந்தரானந்தர் முதலிய சித்தாந்த மு

த்தர்கள் எப்படியிருந்தார்கள்-அல்லது, இருக்கிறார்கள்?-பாடுபட்டு அனேக அற்புதங்களைச் செய்தார்-தான்தான் பட்டபாடுகளை அருள்வடிவத்தில் அனேக நூல்களாக்கி வைத்தார்கள்-ஆலயங்கள் அமைத்தார்-கடைசியில் அப்பொழுதொடுக்கிறார்-அப்படியொடுங்கிறார்-இப்படி யொடுங்கிறார்-மறைந்துவிட்டார்-பறந்துவிட்டார் - என்று பேசுகிறோம் - பொன்னுபொன்னுதான்-நகைகள்பலது-என்பதுபோல், நாமமும் ரூபமும் வேறாக விருக்கினும் அனுபவிக்கக்கூடிய பதம் பொன்பதம்தான் என்றுசொன்னார். இவ்வாறு சீடன் செய்த பலகாலப்பணிவிடையால், வாக்குமனக்காயங்கள் வழிப்பட்டுவந்தது. அவனுக்கு, கண்டதைக்கண்டும், சொன்னதை சொல்லியும், நினைத்ததைநினைத்தும், செய்ததைசெய்தும், மூவிதகாரணங்கட்கும், குருபாக முண்டாயிற்று. மற்றொருநாள், அப்பா! குழந்தை, குடி, பணம், காசென்று பழகுகின்ற ஒருவன் ஒருமணிநேரம் உறங்கி யெழுந்திருந்தாலும், ஒன்பதுமணிநேரம் உறங்கி யெழுந்திருந்தாலும் குழந்தை குடியென்றே யிருப்பான் - அதைப்போலவே, குளி, செபம், தபம், விரதம், பிள்ளையாற் பூசை யென்றிருப்பவன், எல்வித நித்திரைவிட்டெழுந்திருந்தாலும், பிள்ளையாற் பூசையென்றுதானிருப்பான்-ஆதலால், மோக்ஷவழியைப் பழகுவோம்-பிறவியை யொழிப்போம் இன்னார்க்கின்னபடி யென்று ஆகிருதிக்கும், பிரகிருதிக்கும் பேதம்காட்டி அமைந்திருக்கின்ற சீவன்யாது?-அது, இவ்வாறு பிண்டத்தில்பொருந்தியிருப்பது எந்தசக்தியாலே?-அந்தச்சக்தியெப்பமுமுள்ளது-எங்குமிநிறைந்தது-அதற்கு அழி

வில்லை-சுவாச வுச்சுவாசத்துடன் அமைந்திருக்கின்ற அந்த சக்திதான் தெய்வசக்தி - சாக்ஷால்காரசக்தி என்றார்.

முன்னோர், சிவன், விஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர் அநுமான், கருப்பண்ணன், சாத்தான், தேவியென்று அநேக பேதங்களாக தெய்வவணக்கம் செய்தார்கள். மனதை ரக்ஷிக்கும்பொருட்டு, மந்திரங்களாலும் மற்று உபாசனைகளாலும், லக்ஷமென்றோ கோடியென்றோவுள்ள சம்பாத்தியம் ((சித்தி) செய்கிறார்கள். அப்படி ஓரேநிலையிலுள்ள பழக்கம் மனோலயத்தைக்காட்டும். ஆகையால், முக்திக்குமுன் வருகின்ற அகம்படி சித்தியாம். சிவன் அப்படி செய்தான்-சுப்பிரமணியன் இப்படிச்செய்தான்-அநுமான் அப்படி-கருப்பண்ணன் இப்படி-தேவி அப்படியென்று கொண்டாடுகிறார். ஆனால், எல்லாச்செய்கையிலும் அற்புதசக்தி ஒன்றுக்கவும் துண்டாகவு மிருக்கிறது ஆதலால், சக்தி (தேவி) யுபாசனையால் எல்லாவுமாம். ஆனால், சக்தியை யுபாசித்து ஆட்டுவதைவிட அந்தச்சக்தியை தானகச்செய்து ஆடுவதே பரமானந்தம். சிரஞ்சீவி தத்திக்குள்ள அதிகாரம் அவ்விடத்தில் ஸ்தாபித்திருக்கும். இப்படி, மணிமந்திர அவுஷதங்களால் மனசம்ஸ்காரம் செய்கிறவர் எல்லோரும் நல்லநெதியை யடைவார்கள். "எத்தொழிலைச்செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும்" எல்லோரும் முமுக்ஷக்களாவார். தர்மம் யதார்த்த தர்மமாகும். எல்லோர்க்கும் பரவுபகாரமே பரதெய்வமாகும் ஏழைகளுடைய பசிதாகங்கள் ஒழிக்கூடேனும் எல்லோரும்பேரின்பத்திற்கு பாடுபடுவார்கள் அல்லது பங்குகொள்வார்கள்.

ஆகையால், தர்மத்தினுடைய, ஓர் கையான தானத்தையும் அன்பர்கள் ஆலோசிக்கவேண்டும். கெட்டுப்போகவேணுமென்று யாராவது எதாவது செய்வார்களா? இல்லை. சத்தியம், பக்தி, விசுவாசம் இவைகளுடன் பிச்சையெடுப்பவன் ஒருநாளும் அதைப்பழிக்கமாட்டான். யதார்த்ததர்மத்தை முன்னிட்டு யாசகம் செய்கிறார்கள். அதற்கு, சிலர் நாலு, அல்லது ஐந்து நாள் எதோகொடுத்ததாகவும் வரலாம். ஆறுவதுநாள் பிச்சைக்காரனைப் பார்த்தவுடன், சிலர் எழுந்து எங்கயோ போகிறார். சிலர் தூங்காமல் தூங்கி விடுகிறார்கள். மற்றுசிலர் பகிமைக்கோ எளிமைக்கோ, ஆயிரமாயிரம் கேலிபண்ணி அனுப்பிவிடுகிறார் ஆகக்கூட அத்தனைவான்களுடைய வெறுப்படைந்த முகக்குறியே பிச்சுக்களை மேலே அவ்விடம் செல்லாமல் செய்யும். அய்யோ! ஏழைக்கு இல்லையென்று சொல்லலாமா? கை நீட்டினால் கால் காசாவது ஒருகவாளமாவது, கந்தல் கூறையாவது அதனைப்பார்த்து அவசரம்போல கொடுத்து உதவ வேண்டுமல்லவா? சாதுக்களுடையமனம் சங்கடப்படுமாகில் அக்கினியாக எரியாதா-கொடுக்கின்ற நமக்கு சத்தியம், பக்தி, விசுவாசம் இவையில்லாவிடில் நாமே கெட்டுப்போகும். வாங்குகிறவர்க்கு இல்லாவிடில் அவர்கெடுவார்களென்று தெரியாதோ. ஆயிரம்பழஞ்சொல் படித்தவன் அரை ஞானியென்று சொல்வதால் அச்சொல்படியே நடக்கிறவன் முழுஞானியாகுமல்லவா? பழையநீதிகளை கைவிடாமல் எல்லோரும் தர்மம்செய்யுங்கள்! தர்மம் தலைகாக்கும்! சத்தியமே சாகஷி.

உ

சிவமயம்.

ஞானானந்தமாலை.

அரஅரஅர சிவசிவசிவ
அடியார்தம்முளத் தமர்ந்தவானந்த
அறிவிற்குள்ளறி வருளுக்குள்ளருள்
உயிர்க்குயிராகி யுணர்கொளும்சும
துலகவாழ்க்கையில் உழறவாள்கயில்
உனைப்பொறுத்ததே வினைப்பொறுப்பெலாம்
வினைக்கலாமன்றி எனக்கென்னமன்று
துதித்தெழும்பொன்னம் பலத்தெய்வமன்றோ
பிறந்தகாரணம் பொருந்தச்செய்தவன்
நிறைந்தகாருண்யப் பெருந்திகைக்கடல்
உரைத்தபூரண வுருத்தரித்தவன்
குருப்ரமாணிமுன் னருள்ப்ரமாணிமுன
பருள்ப்ரதானியம் பலப்ரதானிமன்
நடப்ரசாபதி சபச்சபாபதி
நடராசபதி நமச்சிவாயமர்
திரசிதம்பர பரபஞ்சிகர
கருமயந்திர வருமதந்திர
திகம்பராம்பர சிதம்பரேசுவர
விரும்பினேனையா தரும்பமேனைய்யா
வருந்தினேனைய்யா இரந்தனே அய்யா
இறந்தனே அய்யா ப்ரபஞ்சகாரணம்
அறிந்தனே அய்யா அரஅரஅர
கறந்தபாலுக்கு களங்கமில்லாப்போல்

பிறந்தபிள்ளைக்கு பொருந்திநின்றயே
இடம்தெரிந்திலேன் செடம்தெரிந்திலேன்
திடம்தெரிந்திலேன் திருவுளமன்றோ
அமைந்தசீவன்நீ யதற்குமூலம்நீ
யிமைப்பொழுதேனும் உமைப்பிரிந்திலேன்
அகிலமும்நீயென் றறிந்ததிசய
வயிக்கியம்பெற வனுக்ரகிப்பயோ
செடத்தினுள்காற்று கடத்தினுள்காற்று
விடப்படாவாறே தொடப்படாவாறே
மிழிக்குள்பட்டதும் செவிக்குள்பட்டதும்
மணத்திற்பட்டதும் ருசிக்கப்பட்டதும்
அடுக்கத்தொட்டதும் மனத்தில்பட்டதும்
தடுக்கமாட்டாமல் தனித்துக்காட்டாமல்
பசிதாகங்களால் பகரவொட்டாமல்
பகலிரவெனும் பயப்படாமலே
உறக்கமுணிரண் டியற்கையாயுள்ள
படிக்குசீவனே தனக்குத்தானகி
ஒளிக்கொளியாகிப் படுக்குங்காலையில்
அதற்கதாய்வகை திரித்துதாய்தந்தை
பவற்கவராகி பறிவிற்குள்ளாகி
யடிக்கவேவிடம் பொருள்கருக்களைப்
பழக்கவேமனம் பதிக்கவேவயற்
பிழைக்கவேயென்று பகுத்தறிந்தபின்
உனைக்குறித்தவென் மனக்கருத்துநீ
யெனத்துதிக்கெனா மூனைத்துதித்தயே
அறியாததெல்லாம் அறிந்துக்கொள்ளவோ
அவதரித்துயிற் குயிரெனக்கொண்டாய்
அறிந்தானேதே னிருந்திதோமுன்னம்

அதற்குசாக்ஷி யிருக்குமேயப்போ
உனக்குநீயென வெனக்குநானனைத்
துயிர்க்குமுள்ளிருந் துலாவச்செய்தயே
குழந்தையாயுளம் குளிர்ந்தநாளெலாம்
அருந்துமூனெனும் அமிர்தபானத்தால்,
அளந்திடத்தாவி யமர்ந்திடத்தாவி
வளர்ந்திடத்தானே மறைந்திருந்தயே
மனமெனுமொரு தனிப்பொருளாகி
தினம்தினம்வளர் பலம்பெறும்பகற்
பரம்பரையாகிப் படைத்துவிட்டயே
நிரந்தரம்துதித் திருத்தப்பட்டயே
உடப்பிறப்புயிற் உலகம்சூழவே
படிப்படிப்படித் திடப்படுத்திடப்
படும்படிக்கருள் பொருளளித்தயே
நடம்புரிந்து நன்னிடமடைந்தயே
அரஅரஅர சிவசிவசிவ
பரபரபர வருள்ரகசிய
விருக்ஷமாய்வரும் விரைக்குளேவளர்
தனிப்பெருஞ்சோதிச் சுடற்கொடியாகி
மனமகிழ்மாயா மயப்பொருளாகி
இனம்பகர்ந்த தன்னினத்துறவாகி
உறவிற்குள்ளுற வுணர்பழக்கத்தால்
அறிவாகிப்பிறந்த தோவறிகிலேன்
நினைக்கவாங்காங்கு பதிக்கிதேமனம்
மயக்கமோவொன்றும் மறக்கவோயில்லை
வளர்ந்துவாய்சொலும் வளர்ந்துவஸ்துவும்
கலந்தறிந்தெனைக் கலந்துகொண்டயே
அகவுணர்வுழர் கனவில்லாமலே
சுகமாயிப்படுத் துறங்கிறப்போலே
இகபரங்களென் றிரண்டிலாதொரு
செயவெளியெனும் மனவெளிபோலே
மவுனமாமகா மகிமைபூணவே
அவனவனாகிக் கெவுனநாதத்தில்

அடங்கியோங்காரத் திடங்கொண்டாங்கார
மெடுங்கிடத்தரு ளொளிப்படும்வண்ணம்
பளீர்பளீரென்று பரவெளிப்பட்டுப்
பசுங்குழந்தையாம் பருவத்தில்மனம்
பகர்ந்தநேயர வெளியாகிப்ராதி
பலித்துபப்பர பரபரவென்று
பளபளத்துணர் பலபலவாறே
அதற்கதுவாகிப் பதார்த்தபேதத்தால்
மனத்துலக்கமோ யினத்துளக்கமோ
அகத்துவந்தயே புறத்துவந்தயே
அகத்திற்குள்ளகம் புறத்திற்குப்புறம்
அகப்புறமாகி புறப்புறமாகி
இனம்நிறம்குண வகைதிரிவாகி
மனமெனுமிலா துளவறிவாகி
பதிக்கவேமனம் சலிக்கவேமனம்
நினைக்கவேமனக் கணக்கெனக்கண்டாய்
சிவசிவசிவ சிதம்பரேச்வரா
சிவபஞ்சாக்ஷரச் வரூபரூபகா
சிறியேனென்றும் தெரியேனெங்கனம்
பிறவிக்காரண குருவாகநின்றாய்
தனிப்பிறப்பாகித் தனிப்பிறப்பாகி
தலைமைக்கர்தாவாய் தலைமெய்கற்தாவாய்
வளர்ந்ததும்நீயே வளர்ந்ததும்நீயே
யுளம்தெளிந்தயே லுணர்ந்ததும்நீயே
அமைந்ததும்நீயே யமர்ந்ததும்நீயே
பரம்பரையாகிப் பகர்ந்ததும்நீயே
மூழிப்பதும்நீயே நடப்பதும்நீயே
சிரிப்பதும்நீயே களிப்பதும்நீயே
உனைநினைத்தனே வுனைத்துதித்தனே
உனைக்குறித்தனே வுணரப்பெற்றனே
இனும்எனையறிந் திலேன்சிதம்பர
சிவசிவசிவ நமச்சிவாயவோம்
சிவாயநமவோம் யநமசிவவோம்

மசிவயநவோம் வயநமசிவோம்
சிவசிவவென்று சதாசமயமும்
நடந்திடச்செய்தாய் நடத்திடச்செய்தாய்
நடந்திடச்சொன்னேன் இருந்திடச்சொன்னேன்
படுத்திடச்சொன்னேன் முழித்திடச்சொன்னேன்
பகர்ந்திடச்சொன்னேன் மனத்திடமுன்னை
பிரிந்திலேனய்யா அரஅரஅர
தெரிந்திலேனய்யா சிவசிவதிரு
வுளம்தரவேணும் வரம்தரவேணும்
சரணம்தெய்வமே சரணம்தெய்வமே
சரணம்சங்கர சிவசிவசிவ
திருச்சிற்றம்பலம் திருப்பொன்னம்பலம்
தனிக்குழந்தையா யுனக்குமாமலை
முடிக்குமேல்முடி மணிக்கொடியாகி
கிழக்குதித்தவன் கணக்குமேற்குமேல்
முகத்தைவமாகி யுகத்தைவமாகி
பிறக்கச்செய்ததும் வளர்க்கச்செய்ததும்
எனக்குதாய்தந்தை யெனக்கடவுளாய்
அவதரித்தெனை யனுக்ரகித்தபோல்
அனுதினமுனை யடிபணிந்தனே
உலகில்நல்லபே ருறவுபூணவே
வுடல்நியமங்க ளுறைத்துக்காணவே
சருகிலேதின்று மலைகுகைசென்று
சிவசிவவென்றும்பரதேசமெங்கும்
நடந்துநாய்போல வலைந்திரந்துண்டு
கழிந்தநாளெல்லாம் நினைந்துநாமெல்லாம்
அரஅரஅர சிவசிவவென்று
திருநாமம்பாடி யவனைவாடி
அவனடியார்க ளொடும்வினையாடி
சிவசிவசிவ திருவுளமன்றோ
அரஅரஅர அவனுளமன்றோ
பரதேசமெங்கும் பரப்ரகாசமே
பணப்பெருமை கோபுரப்பெருமையோ

தனித்தலைமையோ தயப்பெருமையோ
மணல்தரியும்பொன் மணித்காரங்களாம்
நவலோகங்களாம் நவரத்னங்களாம்
சிவசிவவென்றும் தெரிந்திலேனய்யா
இறந்தயேரெழுந் திருக்கச்செய்தருள்
மருநதாகும்தில்லை திருச்சிற்றம்பலம்
சிவசிதம்பரம் சிவசிதம்பரம்
அருள்பெருஞ்சோதி யறிந்துநின்றவன்
ஒருவருங்காணு தொளித்துநின்றவன்
உடலில்லாதவன் உயிரில்லாதவன்
ஒளிக்கொளியாகி யொளித்துநின்றவன்
நினைப்பிலுள்ளவன் எனைப்பிரியாத
தனிப்பரமாகித் தலைமைப்பட்டவன்
அதிசயங்கொளும் அகிலசித்திக்கும்
அதில்பரம்பரா வனந்தமுக்திக்கும்
படைக்கவும்பற்றி வளர்க்கவும்அதை
அழிக்கவும்கர்த்தா அனைத்திற்கும்கர்த்தா
நினைக்கவும்கர்த்தா வுரைக்கவும்கர்த்தா
பழக்கவும்கர்த்தா வயிக்கியகர்த்தா
உளன்யிலான் அன்பற்குளன்கனகவம்
பலன்சிதம்பரன் சிவன்சிதம்பரன்
அரஅரஅர சிவசிவசிவ
அகிலசீவனுள் ளருள்சோதியாகி
அனேகனேகமா யதேகமேகமா
யமைந்தகாரணம் சமைந்தசீவனுள்
அறிந்தகாருண்யம் சொரிந்தபேரொளி
பொருந்துமாறருள் விருந்தெனவரும்
அசனநித்திரைகட் கறிவாதாரமாய்
அதுமலாததற் கதுவிதுவாகி
அதற்குமப்பாலே தனிப்பொருள்போலே
முதற்குருநாதன் அருள்சித்தர்கட்கும்
முறைக்குமூவற்கும் முறைக்குயாவுக்கும்
மறைக்குமற்றுள புராணசாத்திர

வகைக்குமெட்டாத வகைக்குள்பட்டவா
ஞானிக்குவஸ்துவாய் நினைக்கச்சித்தியாய்
அதாதுரூபமா யரூபரூபித
அவஸ்தையிவ்வாறு வரத்தகுமாறு
நீவிர்த்தியாயனு பவித்தரூபமாய்
புறத்தகத்தொரே தாத்திருத்தாராய்
சிதம்பரமெனும் சிவத்தலமாகி
இகபரங்கட்கும் இருதயத்தமா
யிருக்கனித்தமும் எனக்குளெப்பமும்
இனித்துக்கொண்டயே தனித்துள்கண்டயே
அரஅரஅர வடியன்பட்டபா
டறிந்தபேரெவற் படும்தெயாகிதே
தெரிந்ததெய்வமே திருச்சிற்றம்பலம்
சிதம்பரமென்று நிதம்துதிக்கின்றேன்
சிறுநாளிலுனை மரம்மண்ணுசெம்பு
கரிங்கலென்றெலாம் களியாய்கும்பிட்டேன்
படிகலிங்கமும் படங்களும்வெய்து
பகலிரவுனைப் பழகப்பூசித்தேன்
குளிசெபம்தபம் வ்ரதமெலாம்பண்ணி
பலபலவிதம் பகர்ந்துகும்பிட்டேன்
விபூதிசந்தன விலேபகுங்கும
விசேஷவாசனைத் திரவியங்களும்
மலர்தும்பைகொன்றைத் தளிர்வில்வம்செந்தா
மரைப்பிச்சிமுல்லை தலத்தாமரைப்பூ
துளசிபச்சிலை யலரியெத்தனை
சுவற்ணமாலைகள் சிவந்தபட்டுகள்
மணிமணியாக வணியவெய்த்தனே
அவல்பொரிபழம் கடலைதேங்காய்நெய்
யடைவடையப்பம் கரும்புசக்கரை
அரஅரவென்றே யளித்துவெய்தனே
உனக்கென்றுவெய்து நினைத்துனின்னன்பர்
இணக்கம்வெய்த்துனை துதித்துக்கும்பிட்டேன்
மகத்தாமந்திரம் செபித்துக்கும்பிட்டேன்

பெலத்தயந்திரம் வரைத்தாக்கும்பிட்டேன்
உறக்கம்விட்டனே வுனைக்குறித்தபேர்
பழக்கப்பட்டேனே பசியுமற்றனே
சதாசமயமும் திருமந்திரமே
மொழியப்பெற்றனே திருப்பொன்னம்பல
தனித்தெய்வாலய மெனக்குள்வெய்தனே
சதாசிவாசிவா சிவாவென்றிட்டனே
இகபாசுகமறியும் நின்னன்பர்
சகவாசம்பெற்றேன் சுகவாசம்பெற்றேன்
பிரியாதெப்பமும் பிரியம்வெய்தானே
தெரியவேநல்லோர் பெரியோரைக்கூடி
அறிவுசொல்லிச்செய் வதுமுழுதும்கேட்
டனுசரித்தாக்கண் டதேரூபமாகி
நினைக்கச்சத்தியம் நடக்கச்சத்தியம்
மிழிக்கச்சத்திய முறைக்குசத்தியம்
முறைக்குசத்திய முறைக்குசத்தியம்
மறைக்காச்சத்தியம் மறக்காச்சத்தியம்
உடலைப்போற்றினே னுயிரைப்போற்றினேன்
உயிருட்கொண்டரு ளுயிரைப்போற்றினேன்
உடலுயிரென்று யொடுங்கின்றபே
ருடையசித்தத்தி லுலாவுமுந்தனே
உணர்ந்துபோற்றினேன் பணிந்துபோற்றினேன்
மனத்தைப்போற்றினேன் குணத்தைப்போற்றினேன்
பரவெளிவெட்ட வெளியெங்குமொரு
மறைப்பிலாமனம் மறக்காதவணம்
களவில்லாமலே சதியில்லாமலே
கலகமில்லாமல் களங்கமில்லாமல்
அகங்காரயில்லாம லும்கோபமில்லா
தசங்கபம்மற்றுள கெடுங்குணமிலா
தமைந்தகாரணம் அறிந்தசோவே
படைத்தவானும்பெண் பிறப்பிரண்டென
குறித்தசாதியும் குணமும்கண்டனே
சதித்திலேனய்யா பழித்திலேனய்யா

ஞானாநந்தமாலை

கெடுத்திலேன்பெண்ணாய்ப் படைத்தபேசாையும்
மயக்கிலேனய்யா மறந்திலேனய்யா
மயங்கவில்லையே பயந்ததில்லையே
மனம்தெரிந்தனே மனம்தெளிந்தனே
சிவாசிவாவென்று சதாமனம்நாடி
அவனடியார்தம் அடிதொழுதாடி
சிவகீர்த்தனமே தபமெனப்பாடி
சதாகாலபூசை யெதோவெனத்தேடி
மலர்கடுவிழின் மலரடிபோற்றி
மகாதேவாசிவா சிவாசிவாவென்று
மனக்கருத்துகொண் டுனைத்துதித்தபோல்
அனைத்துஞ்செய்ய வேயுனைத்துதித்தனே
கருணையேநீயென் றொருமனதாகக்
கலர்ந்தசிவனைக் கருதிக்கண்டனே
உயிரில்லாப்பயிற் வளராதவண்ணம்
உளத்திருந்துநீ யுனைத்தெரிந்தயே
உனக்குப்பூசைக்கு மணக்கும்பூவுக்கு
நினைக்கவேபுல்லும் பறிக்கலாகுமோ
தெரியேன்பூசைக்கு சிறியேனெங்கனம்
திருவுளம்பெற்றுப் பரகெதியற்றும்
கரம்குவிப்பதோ செடம்குனிப்பதோ
மனம்குறிப்பதோ மிழிசுழிப்பதோ
வுனைத்துதிப்பதோ வுடம்பாடுவதோ
உறக்கொழிப்பதோ புசிப்பொழிப்பதோ
வுயிர்செடங்க ளொன்றெனப்படுப்பதோ
வுனக்குப்பூசைநீ யிருப்பதெவ்விடம்
உனைக்காணும்பொருட் டினும்தெரிந்திலேன்
அரஅரஅர சிவசிவசிவ
திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்
அணிமாதியஷ்ட மகாசித்திகட்கும்
குருநாதற்னல்லாம் தரும்நல்லவல்லான்
அவனவனுகி யனேகரூபத்தில்
ஓரேகுணத்தனையோரே தரத்தனைப்

மலசெலமில்லா தொரேமனத்தனு
யதிவிற்காதார வனுமேபோகநதனுய்
திருகாணமும் திடப்பட்டோனுனி
யொருவருங்காணு வுருவாகிக்காணும்
ஓருபாச இயருள்பெறுஞ்சித்தி
மொழியில்கின்றனே யெனையெனையோவென்
றுளமழிந்துக்கண் டுளதெலாஞ்சொன்னேன்
அரஅரஅர வடியனுக்கிரு
வடிக்குமக்களி லொருத்தனல்லவோ
மலைக்குமென்மேற்கு முகத்தனும்மகன்
நிலைக்குநின்றவன் நிலைக்கருந்தெனைப்
படைத்தவாவுனை விடத்தகாதவா
தனைப்படுத்துதே மனம்பதற்றுதே
அவனேபுத்திரன் அவனேபுத்திரன்
அவன்தானேசித்தன் அவதாரசித்தன்
கலியுகத்திற்குக் கடவுள்கண்கண்ட
வடிவம்வாழ்தி யெவ்விடமும்காத்தருள்
அமிர்தமென்றுதெள் ளமிர்துமுண்டுண்டு
அரஅரவென்று அருண்மாலையொன்று
திருவுளந்தோன்றித் திருவடிப்பூசை
இதேலெலகுவென்று சொதேமொழிகின்றேன்
அணிந்தருளெனைக் கனிந்தருளுனைப்
பணிந்துப்பாடினேன் நினைந்துபாடினேன்
பகர்ந்துகேட்டினேன் தொடர்ந்துக்கேட்டினேன்
பகலிரவிலா தருந்திக்கேட்டினேன்
பகுத்தறிவினுல் பயந்துகூட்டினேன்
பதங்களிலணிந் தருள்புரிகுவாய்
நிறந்தரம்பார்த்து நிரம்பக்கேட்டினேன்
நிரந்தரம் தோளிலணிந்தருளுவாய்
மணம்குணம்பார்த்து மகிழ்ந்துக்கட்டினேன்
மனம்போலேமாறி லணிந்தருளுவாய்
சிவசிவசிராய் வரவேகேட்டினேன்
சிரசிற்சூடிநீ சிவம்புரிகுவாய்

அரஅரஅர சிவசிவசிவ
பரபரஅர புரஅரசிவ
மதஅரசிவ மகாதேவாசிவ
யமஅரசிவ அமரபூசித
நமச்சிவாயவோம் நமச்சிவாயவோம்
நமச்சிவாயசம் பவேசொயம்புவே
அரஅரஅர குருவரபர
சிவசிவசிவ பரமபுருஷ
சுசிவிசேஷணா சசிவிபூஷணா
பசிதாகமில்லாப் பரிபூரணாத்மா
வெனப்புகழ்பெரும் தனிப்பெரியவா
களங்கமற்றுள்ள வுடம்புமாற்றுள்ள
கனகமென்றுள கனகமன்றுளா
அரஅரச்மர அரமனமெனும்
திருநெற்றித் திருவிழியுடையவ
துரிதநாசனா வரகபூஷணா
அகிலகாரணா வமிர்தபூரணா
அவனவனென் றுயவனிவனவ
னெனுமுனக்குள்ள மகனிவனன்றோ
யினைத்தனே சிற்றம் பலத்தனேவுமைக்
குறித்தனே சித்தம் பலத்தனேகமே
வுரைத்தவாவுண்மை யுறைத்தவாகுற்றம்
பொறுத்தவாவென்று விதித்தவாசிவா
படைத்தவாவூட்டி வளர்த்தவாவுமைத்
துதித்தவாறுளக் கருத்துவத்தவா
வருகதெய்வமே வருகதெய்வமே
தருகவேவரம் பெருகவேயருள்
புரிகவேசுகம் பெருகவேசுகம்
தெரியவேவிட்ட குறையறிகிலேன்
களங்கமில்லாம லுளங்கொல்லாமலே
சொலும்வண்ணம் நிருமலமாகப்பண்ணி
அமைந்தகாற்றேறி றங்ககச்யித்தமாய்

தடைக்கிடாமலே தனிச்சுதந்த்ரமாய்
உடலுயிரொன்று யுனக்குடையதாய்
ஒரேமனதாகி யுனைநினைந்திருந்
தெனைமறந்துயான் மனந்தெளிந்துமேன்
முனைபுகுந்துமுச் சுடர்பார்த்திட
மவுனமாய்மாயா செடம்மறந்திருந்
தவனவன்தனை யறிந்தவாறனை
நினைந்தொளிக்கொளி கலந்திருந்திடச்
சிரஞ்சீவியாகிச் சுகஞ்சீவியாகி
யருந்துப்சுத்தத்தில் வருந்தும்சித்தத்தில்
இருந்தியற்கையாய் பொருந்தும்தெய்வமே
தவறவில்லையே தடைகளில்லையே
தனியேதானுகிச் சிரஞ்சீவித்தருள்
உனைமறக்காத மனப்பழக்கமா
மொளிக்கொளியாகிச் சுகித்துக்கொண்டனே
அரஅரஅர சிவசிவசிவ
திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்
சிவசிதம்பரம் சிவசிதம்பரம்
இகபரங்கட்கும் இதுவேயம்பலம்
இருதயஸ்தமாயி சைந்தவம்பலம்
இதோசிதம்பரம் இதோசிதம்பரம்
சிவன்சிவன்சொரூபம் பரகாசகாரணன்
அவன்அவன்என்னுண்டவனவன்சிவன்
மணம்குணம்வித் யாதனம்முதலான
மனப்பழக்கத்தின் பலம்பெறும்படிக்
கறிவொரேருபக் குறியாகக்கொண்டுப்
பகர்ந்தபாவைக் கூத்துகந்தபாவத்தை
தெரிந்ததெய்வமே திருகாரணமும்
பொருந்திநின்றுரே பொருளுணர்ந்தவன்
மனமாண்டுசும்மா விருமென்றுசொன்ன
மகாமந்த்ரசக்தி மயமெனக்கண்டாய்
உணர்ந்திடும்பொருட் டொரேதரப்பட்டும்
குழந்தையாண்டவள் குமரவேலென்று

சொரூபம் குறித்தியற்கைய
நவபேதத்தா லிரண்டெனக்கண்டாய்
வடிவியற்கையோ குடியியற்கையோ
வடியாருள் ளமறந்தருளியற்கையோ
சிருஷ்டியெங்ஙனம் எதற்கோவிங்ஙனம்
ஒடுக்கமெங்ஙனம் தனிக்குணம்குணம்
நினைவிலாவுளம் கனவிலாவிதம்
தனித்துதான்சும்மா விருத்திடும்தர்மம்
வருத்துஞ்சித்திகள் பெலத்தபுத்தியால்
இருக்கெவுனத்தில் திடப்படுத்திடும்
அவனவன்தானே யமைந்தவன்ஞான
சிவன்தானேதானு யமர்ந்தகாரணம்
அறிந்தவன்தானே யறிந்தவன்தானே
யவன்செயலெல்லா மனுபவித்தானே
அர அர அர சிவசிவசிவ
அகங்காரமற்றுச் சுகங்காணப்பெற்றேன்
அபிமானம்விட்டேன் அழிமதிவிட்டேன்
சரிதயும்விட்டேன் கிரிகையும்விட்டேன்
சதுர்விதமெனும் அவத்தையும்விட்டேன்
இதிகாசவேத புராணங்கள்விட்டேன்
சுருதிவிட்டேனே ச்மிருதிவிட்டேனே
சுருங்கச்சாத்திர விதங்களும்விட்டேன்
விவகாரம்விட்டுச் சுகரூபம்தொட்டு
சிவசிவசிந்தை யொழிந்துசிறப்பட்டு
சொயம்பிரகாசமாய் சொயம்விசேஷமாய்
சொயஞ்சோதியாகிச் சிரஞ்சோதியாகி
தெரிந்ததெய்வமே நிறைந்ததெய்வமே
சிவசிதம்ப[illegible]அம்பலம்
நமச்சிவா[illegible]வோம் நமச்சிவாயவோம்
[illegible]மச்சிவா யவோம்[illegible]சிவ.

ஞான[illegible]ந்தமாலை.

முற்றிற்று.

22 5048

உ

சிவமயம்

கவனியுங்கள்!

ஸ்ரீயுங்கள்!!

புத்தக விளம்பரம்

ஐயா! எமது கம்பெனியில் அநேகமான புராணங்கள், கதைகள், அம்மானைகள், வயித்திய வாத யோக ஞான சாஸ்திரங்கள் கோர்ட் சட்டப் புஸ்தகங்களும் ஸ்கூல் புஸ்தகங்களும் சொற்ப லாபத்தைக் கருதி வியாபாரம் செய்து வருகிறபடியால் வேண்டியவர்கள் நேரிலும் வீ பீ மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இராமசாமிக்கோன்,

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை

9A
6-15